தூர் வாரி ஆழப்படுத்துதல்.

*10301 திரு. தா. உதயசூரியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோமுகி அணையையும், அதன் மூலம் நீர் தேக்கப்படும் ஏரிகளையும், தூர் வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர் களே,

இல்லை.

திரு. தா. உதயசூரியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலையிலிருந்து உருவெடுத்து வருகிற தொட்டியத்தாறு, சித்தாறு, கல்படையாறு ஆகிய மூன்று ஆறு களில் இருந்து இயற்கையின் காரணமாக ஒரே நாளில் அந்த அணை நிரம்புகிற அளவுக்குத் தண்ணீர் வருகிற நிலைமை இருக்கிறது. இந்தக் கோமுகி அணையைச் சுற்றி 146 ஏரிகள் இருக்கின்றன. கள்ளக்குறிச்சி, சின்ன சேலம் ஆகிய பகுதிகளின் குடிநீர்ப்பஞ் சத்தைப் போக்குகிற வகையிலேயும், விவசாயப் பெருங்குடி மக் களுக்கு ஏற்ற வகையிலேயும் இருப்பது இந்த அணையேயாகும். நீண்ட நெடுங்காலமாக இந்த அணை கட்டப்பட்டதிலிருந்து தூர் வாரவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரை வில் தூர் எடுப்பதற்கு ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர் களே, இந்தக் கோமுகி அணை மற்றும் அதை உள்ளடக்கி இருக் கின்ற ஏரிகளைத் தூர் வாருவது என்பதுதான் கேள்வியினுடைய நோக்கம். இந்த அடிப்படையில் தூர் வாராவிட்டாலும் பொது வாக மெய்ன்டெனன்ஸ் என்ற முறையிலும், ஐரோப்பிய பொரு ளாதாரத்தின் அடிப்படையிலும் மற்றும் பல்வேறு வகைகளிலும் அந்தத் தூர் வாருகின்ற பணி நடந்துகொண்டிருக்கிறது.

திரு. தா. உதயசூரியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்டந்தோறும் நீர்ப்பாசனக் கருத்தரங்குகள் நடைபெறுகிறபோது கொட்டாங் குச்சி போல் இருந்த இந்த ஆறுகள் எல்லாம் தாம்பூலத் தட்டு போல் ஆகிவிட்டன. எனவே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் இதைக் கருத்தில் கொண்டு தூர் வாரும் பணிகளில் ஈடுபடும் என்று அறிவித்திருந்தார்கள். ஆனால், அங்கே 146 ஏரிகள் இருக்கின்ற காரணத்தால் எல்லா ஏரிகளை யும் தூர் எடுக்க முடியுமா என்றால் முடியாது என்பது உண்மை

தான். ஆனால், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கின்ற முக்கிய ஏரிகளிலேயாவது தூர் எடுக்கிற வேலையை இந்த அரசாங்கம் ஏற்று நடத்துமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற ஏரிகளைப் பொறுத்த வரையில் அது தேவை என்றால் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோமுகி நீர்த்தேக்கத்திலே குறைந்தது 200 ஏக்கருக்கு மேலே ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். தண்ணீர் பிடிப்பதற்கு விடுவதேயில்லை. 10 அடியோடு அது நின்று விடுகிறது. அதனால் எங்கள் பகுதியிலே மணிமுத்தாறு நதியில் தண்ணீர் வருவதில்லை. எங்கள் பகுதி விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதன் உள்ளே இருக்கிற அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா ? அது பற்றி அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம் என்பதை பல முறை மாமன்றத்திலும், கருத்தரங்குகளிலும் நான் தெரிவித்திருக்கிறேன். ஆனால், அகற்றுகிறபோது சட்டமன்ற உறுப்பினர்களே அகற்ற வேண்டும் என்று ஒரு பகுதியினர் சொல்கிறார்கள். அகற்றக்கூடாது என்று மற்றொரு பகுதியினர் கூறுகிறார்கள். ஆகவே, சில நேரங்களில் நீக்கு போக்காக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இல்லை, இல்லை, இது எங்களுக்கு ரொம்ப முக்கியம் என்று கூறுகிறார்கள். இருந்தாலும், பாசனத்திற்கு இடையூறாக இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை நிச்சயம் அரசு அகற்றும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தூர் வாரும் பணி சம்பந்தமாக சில விஷயங்களைச் சொன்னார்கள். நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிற பல்வேறு ஏரி, குளங்களை மேடாக்கி சரியான மழை பெய்கிற நேரத்தில் கூட தண்ணீர் எல்லாம் வீணாகி வெளியே போய்விடுகிறது. சில நேரங்களிலே அவற்றை ஆழப்படுத்த வேண்டுமென்றால் விதிகளிலே மூன்று ஆண்டுகள் தொடர்ந்து ''ஓவர் ஃப்ளோ'' ஆனால்தான் அதைத் தூர் வாரலாம், ஆழப்படுத்தலாம், கரை உயர்த்தலாம் என்று விதி இருக்கிறது. ஆனால், மூன்று ஆண்டுகள் தொடர்ந்து மழை பெய்வது என்பது நம்முடைய நாட்டிலே ரொம்ப அபூர்வமாகி இருக்கிறது. ஆகவே, அந்த விதிகளைத் தளர்த்தி எங்கெங்கு

மேடாகி இருக்கிறதோ அந்தக் குளங்களை எல்லாம் ஆழப்படுத்தி மழை பெய்கிற காலங்களில் அதிகமான நீரைத் தேக்கக்கூடிய முறையில் அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி முக்கியமான, நீர்ப்பரப்பு அதிகம் உள்ள ஏரிகளை எல்லாம் ஆழப்படுத்துவதற்காகத்தான் பல இடங்களில் புல்டோசர் மூலமாகக்கூட ஆழப்படுத்துகிற அந்த வேலையைச் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, தேவையான, மிக முக்கியமான ஏரிகள் என்ற அந்த வகையில் ஆழப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராசிபுரம் அரசு மருத்துவமனை

*3365 திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராசிபுரம் அரசு மருத்துவமனையில் 100 M.A. பவர் கொண்ட நுண்கதிர் கருவி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது இல்லை.

9-45 மணி.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசிபுரம் அரசு மருத்துவமனையில் 100 எம். ஏ. பவர் கொண்ட நுண்கதிர் கருவி அமைக்கும் திட்டத்தை அரசு நிறைவேற்றியுள்ளார்கள் என்று அறிகிறேன். அது அமைச்சருக்குத் தெரியுமா என்பதை உங்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்ட மருத்துவ அலுவலரிடத்தில், இராசிபுரத்தில் இத்தகைய கருவி அமைப்பதற்கான இட வசதி இருக்கிறதா என்று கேட்கப்பட்டிருக்கிறது. அவரது அறிக்கை வந்த பிறகு, அங்கே பணியாளர்கள் நியமிப்பது பற்றியும், கருவிகள் அமைப்பது குறித்தும் முடிவு எடுக்கப்படும்.